*அஞ்சல் பெட்டி சங்கம் அளிக்கும்...*



# ஆராய்ச்சியாளர்கள் சங்கம்

பெயர்

_______________________



# பொருளடக்கம்

## பாடங்கள்


1 தேவன் எப்படிப்பட்டவர்? பகுதி - 1.

2 தேவன் எப்படிப்பட்டவர்? பகுதி - 2.

3 நாம் எங்கிருந்து வந்தோம்?.

4 யார் நமதுஎதிரி?.

5 வாக்களிக்கப்பட்ட இரட்சகர் யார்?.

6 இயேசு இன்றும் உயிரோடிருக்கிறார் !.

7 நான்கு வினாக்கள்.

8 நான் தேவனுடைய பிள்ளையாக முடியும் !.

9 இயேசு மீண்டும் வருகிறார் !.

10 நான் அறிந்து கொள்ள வேண்டும் என தேவன் விரும்பும் 4 காரியங்கள். .

11 கிறிஸ்துவின் புதிய மனிதன்

12 கடவுளின் மாபெரும் பரிசு



**EXPLORERS 1 WORKBOOK:** ISBN 978-1-938041-69-3 www.mailboxclub.org


*NOTE: The King James Version is used in all Mailbox Club courses. We reserve the right to translate from the original texts where necessary to make the meaning clear to the reader.*


*Copyright © 2011 Explorers 1 The Mailbox Club International Illustrations by Stephen Bates*

பாடம் 1

# தேவன் எப்படிப்பட்டவர்? (பகுதி - 1)

**அன்பு நண்பரே,**

எப்போதாவது தேவன் எப்படிப் பட்டவர் என்று வியந்ததுண்டா? தேவன் மிகப் பெரியவர், மிகவும் ஆச்சரியப்படத்தக்கவர், ஆதலால் நாம் அவரைக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ள முடியாது. ஆனால் அவர் நமக்கு கொடுத்திருக்கிற ஒரு வியத்தகு புத்தகம் அவரைக் குறித்து நமக்கு கூறுகிறது.

**அது என்ன புத்தகம்?** அதுதான் கடவுளின் வார்த்தையாகிய வேதாகமம். வேதாகமம், கடவுள் அனைத்தையும் உருவாக்கியதாக கூறுகிறது. தேவன் சூரியனையும், சந்திரனையும் உருவாக்கினார். அவர், நமக்கு மேலாக இரவு நேரத்தில் வானில் கண் சிமிட்டிக் கொண்டிருக்கிற கோடிக்கணக்கான நட்சத்திரங்களை உருவாக்கினார். தேவன் இந்த உலகத்தை உருவாக்கினார். தேவன், பறவைகளையும், மீன்களையும், மிருக ஜீவன்களையும் உருவாக்கினார். இதன் பின் தேவன் முதல் மனிதனையும், மனுஷியையும் உருவாக்கினார்.



நாம் அவரை அறிந்து கொள்ளவும் அவரில் அன்பு செலுத்தவும் விரும்பும்போது, அது அவருக்கு மிகவும் பிரியமாயிருக்கிறது. தேவனை அறிந்து கொள்வதும், அவரில் அன்பு செலுத்துவதும் தான் நாம் செய்யக்கூடிய மிகச் சிறந்த காரியமாகும். அது நம்மை மிகவும் சந்தோஷப்படுத்தும்.

இந்தப் பாடத்தில் தேவனைக் குறித்து வேதாகமம் என்ன கூறுகிறது என்று காண்போம். நம்மை அதிகம் நேசிக்கிற நமது வியத்தகு தேவனைக் குறித்து ஐந்து மிக முக்கியமான காரியங்களை கற்றுக் கொள்வோம்.

# தேவன் தனி ஒருவர்

**ஒரே ஒரு கடவுள் உண்டு.** அவர் உண்மையும், ஜீவிக்கிறவருமான தேவன். அவர் கூறியது, நானே கர்த்தர், வேறெருவர் இல்லை. என்னைத் தவிரத் தேவன் இல்லை. (ஏசாயா 45:5)

தேவன் ஒரு 'உந்து சக்தி' அல்ல. தேவன் ஜீவிக்கும் தனி ஒருவர். அவர் நம் ஒவ்வொருவரையும் அறிந்தும் நேசித்துமிருக்கிறார். நாம் அவரைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புவதில் தேவன் பிரியப்படுகிறார். எல்லாவற்றிற்கும் மேலாக நாம் முழு இருதயத்தோடும் அவரில் அன்பு கூறுவதை தேவன் விரும்புகிறார்.

# தேவன் ஆவியானவர்

**தேவன் தனி ஒருவராக இருந்தாலும்,** அவருக்கு நம்மைப் போல சரீரம் இல்லை. தேவன் ஆவியாயிருக்கிறார். ஆவியாயிருப்பதை நாம் காணமுடியாது. தேவன் உன்னை உருவாக்கும்போது, அவர் உனக்கு ஒரு சரீரத்தைக் கொடுத்தார். அவர் உனக்கு ஒரு ஆவியையும் கொடுத்தார். உன்னுடைய ஆவி உன் சரீரத்திற்குள் வாசமாயிருக்கிறது. மற்ற மனிதர் உன் சரீரத்தை காணமுடியும். ஆனால், அவர்கள் உன் ஆவியை காண முடியாது.

**தேவன் முழுமையும் ஆவியாகவே இருக்கிறார்,** ஆகவே தான் நாம் அவரைக் காண முடியவில்லை. தேவன், அவருக்கு சார்பாக எந்த ஒரு உருவத்தையும் செய்யக் கூடாது என நமக்கு கூறுகிறார். தேவன், எந்த ஒரு உருவத்தையும் வணங்கவும் கூடாது என்றும் கூறுகிறார். வேதாகமம் கூறுவது, "தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுது கொள்ள வேண்டும்." (யோவான் 4:24)

**நாம் அவரைக் காண முடியாவிட்டாலும்,** தேவன் ஒருவரே உண்மையும் ஜீவிக்கிறவருமான ஆண்டவர். நாம் அவரைத் தெரிந்துகொள்ள அவர் விரும்புகிறார். நாம் தேவனைத் தெரிந்து கொள்ளும்போது அவரை நேசிப்போம். நாம் அவரை நேசிக்கும்போது அவருக்கு கீழ்ப்படியவும் விரும்புவோம்.

# தேவன் மகிமை பொருந்தியவர்

**தேவனுடைய மகிமை மிகவும் பிரகாசமாய் இருப்பதால்** நம்மால் அவரைக் கண்டு தாங்கமுடியாது. சூரியன் மிகவும் பிரகாசமாய் இருக்கும்போது அதை நம்மால் பார்த்து தாங்க முடியாது. அது நமது பார்வையை பாதிக்கிறது. அதை நெடுநேரம் பார்த்துக் கொண்டிருப்போமானால், நாம் நமது பார்வையை இழக்கவும் நேரிடலாம்.

**தேவனுடைய மகிமை சூரிய பிரகாசத்தைவிட அதிக பிரகாசமானது.** அதனால்தான் நம்மால் அவரைப் பார்க்க முடியாது. "ஒரு மனிதனும் என்னைக் கண்டு உயிரோடிக்கக்கூடாது" என்று தேவன் கூறுகிறார். (யாத்திராகமம் 33:20)

**வேதாகமம் மோசே என்ற பெயருடைய ஒரு மனிதரைக் குறித்து கூறுகிறது.** மோசே, தேவனின் ஒரு விஷேச நண்பர்.



# தேவன் பரிசுத்தர்

அவன் தேவனோடு பேசினான், தேவனும் பலமுறை அவனோடு பேசினார். ஆனால் மோசே தேவனைக் கண்டதே இல்லை.

ஒரு நாள் மோசே, தேவனிடம் ஒரு விஷேச கருணை வேண்டினான். “உம்முடைய மகிமையை எனக்குக் காண்பித்தருளும்” என்று கேட்டான். (யாத்திராகமம் 33:18)

**தேவன் அவனிடம்** “நீ என் முகத்தை காண முடியாது, ஏனெனில் என்னைக் கண்டவன் உயிரோடிருக்க முடியாது. ஆனால் நான் உன்னைக் கன்மலையில் ஒளித்து வைத்து கடந்து செல்வேன்” என்றார். மோசே அந்த மலையில் தனித்து ஏறிச் சென்றான். கடவுள் அவனை பெரும் பாறைகளுக்கிடையில் மறைத்து வைத்தார். பின்பு அவர் மகிமை, அவனைக் கடந்து போகும்படிச் செய்தார். மோசே தேவனைக் காணவில்லை, ஆனால் தேவனுடைய மகிமையின் சிறிய பகுதியை அவன் கண்டான். அது அவனுடைய முகத்தை பிரகாசிக்கச் செய்தது.

**மோசே மலையை விட்டு இறங்கி வந்தபோது** அவனுடைய முகம் மிகுந்த பிரகாசமாய் இருந்ததால் ஜனங்கள் அவனைக் கண்டு பயந்தார்கள். மோசேயும் அவனோடிருந்த ஜனங்களும், “கர்த்தாவே, தேவர்களில் உமக்கு ஒப்பானவர் யார்? பரிசுத்தத்தில் மகத்துவமுள்ளவர்...?” என்று கூறியதில் வியப்பொன்றும் இல்லை. (யாத்திராகமம் 15:11)

**தேவன் தூய்மையானவர், பரிபூரணர், எந்த விதமான பாவமும் இல்லாதவர் என்பது இதன் பொருள்.** வேதாகமத்தில் சில நேரங்களில் இருள் என்பது பாவத்தை குறிக்கிறதாய் இருக்கிறது. வேதாகமம் கடவுளைக் குறித்து “தேவன் ஒளியாய் இருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருள் (பாவம்) இல்லை” என்று கூறுகிறது. (1 யோவான் 1:5)

**தேவன் ஒளியாகவும் மகிமையாகவும் இருக்கிறார்.** தேவன் தூய்மையானவர், தேவன் பாவம் செய்வதில்லை, தேவன் எப்போதும் நல்லதெதுவோ, சரியானதெதுவோ அதையே செய்கிறார், பாவமான எதுவும் தேவனுடைய சமுகத்தில் வரமுடியாது, “நம்முடைய தேவனாகிய கர்த்தர் பரிசுத்தமுள்ளவர்” என்று வேதாகமம் கூறுகிறது. (சங்கீதம் 99:9)

தேவன் ஒருமுறை, ஒரு தரிசனத்தின் மூலமாக, ஏசாயா என்கிற ஒரு தீர்க்கதரிசியோடு பேசினார். தரிசனம் என்பது ஒரு கனவைப் போன்றது. ஏசாயா அந்த தரிசனத்தில் தேவன் சிங்காசனத்தின் மேல் இருப்பதைக் கண்டான். அவருடைய பீடத்தைச் சுற்றிலும் அநேக தேவ தூதர்கள், தேவனைத் துதித்து **“சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய, மகிமையால் நிறைந்திருக்கிறது”** என்று பாடினார்கள் (ஏசாயா 6:3). **தேவனின் இந்த தரிசனத்தைக் கண்ட ஏசாயா** மிகவும் கலக்கமடைந்தான். இந்த தரிசனம் அவன் ஒரு பாவி என்பதையும், தேவன் பரிசுத்தர் என்பதையும் காண்பித்தது.






# தேவன்
## அன்புள்ளவர்

**தேவன் நம்மை நேசிக்கிறார் என்றும் மிகச் சிறந்தவைகளையே நமக்காக விரும்புகிறவராயிருக்கிறார் என்பது இதன் பொருளாகும்.**

**தேவன் நம்மை நேசிக்கிறார் என்று எப்படி தெரிந்து கொள்ள முடியும்?** இரண்டு வழிகளில் இதைத் தெரிந்து கொள்ள முடியும்.

- **தேவன் இதைக் கூறினார்:** தேவன் தமது வசனத்தில் கூறுவது, "அநாதி சிநேகத்தால் உன்னைச் சிநேகித்தேன்;" (எரேமியா 31:3)
- **தேவன் நமது பாவங்களுக்கான தண்டனையை தன் குமாரன் ஏற்றுக்கொள்ளும்படிச் செய்தார்.**

தேவன் தம்முடைய குமாரன் கர்த்தராகிய இயேசுவை, நம்முடைய பாவங்களுக்காக - அதாவது, நாம் வார்த்தையாலும், செயலாலும் செய்த பாவங்களுக்காக, அவரை சிலுவையில் மரிக்கும்படியாக ஒப்புக் கொடுத்ததன் மூலம்; நம்மீதுள்ள தமது மகத்தான அன்பை வெளிப்படுத்தினார். வேதாகமம் இப்படியாக கூறுகிறது, "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோமர் 5:8)

நீ யோசிக்கலாம்! "நான் வார்த்தையாலும் செயலாலும் செய்த தவறான காரியங்கள் தேவனுக்கு தெரியுமா?" ஆம், தேவனுக்கு அவைகள் யாவும் தெரியும். ஆனாலும், அவர் இன்னமும் உன்னை அவருடைய முழு இருதயத்தோடும் நேசிக்கிறார். உன்னுடைய வாழ்வின் ஒவ்வொரு நிமிடமும் உன்னை நேசிக்கிறார்.

**இயேசு கிறிஸ்து என் பாவங்களுக்காக மரித்தார்.** அவர் உங்கள் பாவங்களுக்காக மரித்தார். ஆனால், அவர் மரித்தவராகவே இருந்துவிடவில்லை. அவர் கல்லறையிலிருந்து மூன்றாம் நாள் உயிரோடு எழுந்தார். அவர் நமது உயிருள்ள இரட்சகர்! அவர் உன் பாவங்களுக்காக மரித்து பின் உயிரோடெழும்பிய உன் இரட்சகர் என்று நீ அவரில் விசுவாசம் வைக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். **தேவன் உன்னிடம் அதிகமாக விரும்புகிற காரியம் என்னவென்று தெரியுமா?** அவர் உன் அன்பை விரும்புகிறார். நீ அவரை முழு இருதயத்தோடு நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.

**நீ முழு இருதயத்தோடும் அவரை நேசிப்பதை தெரிந்து கொள்வது, அவரை பிரியப் படுத்துகிறது.**

வேதாகமத்தில், கூறப்பட்டுள்ள தாவீது ராஜா, ஒரு பெரிய தேவனுடைய மனிதனாய் இருக்கிறான். அவன் தேவனை நேசிப்பதை தெரிந்து கொண்டான். அவன், "நான் உம்மை நேசிப்பேன், ஆண்டவரே!" என்று கூறுகிறான், இது தேவனை மிகுந்த பிரியப் படுத்தியது. தாவீது ராஜாவைப் போல் நீங்களும் அவரை நேசிப்பதை தெரிந்து கொள்ளும்போது அது அவரை பிரியப்படுத்தும்.

இதோ இந்த ஜெபம் உனக்கு உதவும்: "அன்புள்ள ஆண்டவரே, நான் உம்மை நேசிக்க வேண்டும் என்று நீர் விரும்புவதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நான் என் முழு இருதயத்தோடும் உம்மை நேசிக்க விரும்புகிறேன். நீர் என்னை இவ்வளவாக நேசித்து, உம்முடைய குமாரன் கர்த்தராகிய இயேசுவை, என் பாவங்களுக்காக சிலுவையில் மரிக்க, அனுப்பியதற்கு உமக்கு நன்றி செலுத்துகிறேன்."




## “நான் எப்படி தேவனின் பிள்ளை யாகலாம்?”

அ. நீ பாவி என்பதை ஏற்றுக் கொள்

ஆ. இயேசு உன் பாவங்களுக்காக மரித்தார் என்று விசுவாசி

இ. கிறிஸ்துவிடம் வந்து, அவரை உன் இரட்சகராக ஏற்றுக் கொள்.

“கிறிஸ்துவே, நான் எனது பாவங்களுக்காக உண்மையாகவே வருத்தப் படுகிறேன். நீர் தேவனுடைய குமாரன் என்றும் எனது பாவங்களுக்காக மரித்தீர் என்றும் விசுவாசிக்கிறேன். இப்போதே, நான் தெரிந்து கொண்டபடி, நான் உம்மை என் இரட்சகராக ஏற்றுக் கொள்கிறேன்.”


# என் மனப்பாட வசனம்



# பொக்கிஷ வேட்டை

கண்டுபிடித்த பொக்கிஷத்தைக் காண, கீழ்காணும் இரகசியக் குறியீடுகளைப் பயன்படுத்துக:-







# கேள்விப் பக்கம்

## ஆராய்ச்சியாளர்கள் - 1 பாடம் 1

குறிப்பு: சரியான பதிலை தேர்ந்தெடுக்கவும்
ஆ
'அ' அல்லது 'ஆ' கொடுக்கப்பட்ட கட்டத்திற்குள் எழுதுக.

**1. தேவன் எப்படிப்பட்டவர்?**

அ. தேவன், இந்த உலகில், நன்மை செய்ய ஓர் உந்து சக்தியாய் இருக்கிறார்
ஆ. தேவன், நம்மை அறிந்து, நேசிக்கும் ஜீவனுள்ள ஒருவர்.

**2. நாம் தேவனைக் காண முடியாது, ஏனெனில்**

அ. தேவன் ஆவியாய் இருக்கிறார், நாம் ஆவியாய் இருப்பதை காண முடியாது
ஆ. தேவன் மிகத் தூரத்தில் இருக்கிறார், ஆதலால் நம்மால் அவரைக் காண முடியாது

**3. வேதாகமத்தில் தேவன் பரிசுத்தர் என்று கூறுவதின் பொருள்**

அ. தேவன் மிகவும் நல்லவர்
ஆ. தேவன் தூய்மையானவர், பரிபூரணர், எந்தவித பாவமும் இல்லாதவர்

**4. தேவன் என்னை நேசிக்கிறார் என்று அறிந்திருக்கிறேன். எப்படியெனில்,**

அ. அவர் தமது குமாரனை என் பாவங்களுக்காக மரிக்கக் கொடுத்தார்.
ஆ. அவர் அவ்விதம் செய்வதாக நான் உணர்கிறேன்.

**5. நான் எல்லாவற்றையும் விட எதை செய்யவேண்டும் என்று தேவன் விரும்புகிறார்?**

அ. தேவன், அவரை முழு இருதயத்தோடும் நான் நேசிக்க வேண்டும் என்று விரும்புகிறார்.
ஆ. தேவன், அவருக்காக நான் அதிகமான நல்ல காரியங்களை செய்ய வேண்டும் என்று விரும்புகிறார்.

இந்தப் பாடத்தின் மனப்பாட
வசனத்தை இங்கேஎழுதுக:



புதையல் வேட்டை
புதிரின் விடையை எழுதுக:

பெயர் ____________ பிறப்பு ________ வயது ______ பிரிவு ______

பெற்றோர் / பாதுகாவலர் ____________________

அஞ்சல் முகவரி ____________________

நகரம் ____________________ மாநிலம் ____________

# இயேசுவுடன் என் பயணம்

1 இந்த பாடத்திலிருந்து நீங்கள் கற்றுக்கொண்ட மிகவும் முக்கியமான காரியம் என்ன?

2 இந்த பாடத்தில் உங்களுக்கு விளங்கிக்கொள்ள இயலாத ஏதாவதொன்றிருக்கிறதா?

3 உங்களுக்கு ஏதாவது விசேஷித்த தேவைகளோ அல்லது ஜெப விண்ணப்பங்களோ உண்டா?

4 ஒரு நாட்குறிப்பைத் தொடங்க நாங்கள் உங்களை ஊக்குவிக்கிறோம். உங்கள் ஜெபங்களையும், புகழையும், கடவுளுக்கு நன்றி செலுத்துவதையும் எழுதுங்கள்!

the Mailbox Club

Tamil